JOHNSON®
Not just tiles, Lifestyles.

# H&R ஜான்ஸன் அதன் பெரிய வடிவிலான ஜான்ஸன் போர்சிலானோ ராயல் கேர் ஸ்லாபுகளை தமிழக மாநிலத்தில் அறிமுகம் செய்துள்ளது

**கோயம்புத்தூர், 12 ஏப்ரல் 2018**: இந்திய டைல் தொழில்துறையில், பல்வேறு புத்தாக்கங்களை அறிமுகம் செய்யும் பாரம்பரியத்தைக் கொண்டுள்ள, இந்தியாவின் ப்ரீமியம் ஒருங்கிணைந்த வாழ்க்கை முறை தீர்வுகள் வழங்குனராக டைல்கள், பாத்ரூம் தாயரிப்புகள் மற்றும் பொறியியல் செய்யப்பட்ட மார்பிள் மற்றும் குவார்ட்ஸ்களை வழங்கும் H&R ஜான்ஸன் (இந்தியா) நிறுவனம், அதன் பெரிய வடிவிலான டைல் ஸ்லாபுகள் வகையினமான **ஜான்ஸன் போர்சிலானோ ராயல் கேர்** வரிசைகள் உட்பட, புத்தம் புதிய தயாரிப்பு வகையினங்கள் தொகுப்பை அறிமுகம் செய்துள்ளது.

கோயம்புத்தூரில், 12 ஏப்ரல் 2018 அன்று நடந்த, தமிழகத்தைச் சேர்ந்த முதன்மை டீலர்கள் சந்திப்பில், இப்புதிய தயாரிப்புகள் அறிமுகம் செய்யப்பட்டன. இந்த டீலர்கள் சந்திப்பில், பிரிஸம் சிமெண்ட் லிமிடெட், மேலாண்மை இயக்குனர் திரு.விஜய் அகர்வால், H&R ஜான்ஸன் (இந்தியா) செயல் இயக்குனர் மற்றும் தலைமை செயல் அலுவலர் திரு.ஜாய்தீப் முகர்ஜி மற்றும் H&R ஜான்ஸன் (இந்தியா) நிறுவனத்தின் விற்பனைகள் மற்றும் சந்தையாக்கல் பிரிவின் முதுநிலை துணைத்தலைவர் திரு.அனூப் ஸ்ரீகுமார் மற்றும் தயாரிப்பு மேம்பாடு மற்றும் சந்தையாக்கல் பிரிவின் முதுநிலை துணைத்தலைவர் திரு.தினேஷ் வியாஸ் உட்பட பல்வேறு மூத்த நிர்வாகிகள் பங்கேற்றனர்.

இந்நேர்வின் போது பேசிய, திரு.விஜய் அகர்வால் அவர்கள், “H&R ஜான்ஸன் (இந்தியா) சமீபத்தில் இந்தியாவில் அதன் 60 ஆண்டுகளை நிறைவு செய்துள்ளது. இதன் வழியாக, இந்தியாவின் மிகப்பழமையான மற்றும் மிகுந்த நிபுணத்துவம் வாய்ந்த நிறுவனமாகத் திகழ்கிறது. எங்களது நிறுவனத்தின் 60வது ஆண்டில், எங்களது வாடிக்கையாளர்களுக்காக ஒரு புத்தம் புதிய சுவர் மற்றும் தரை டைல் தயாரிப்புகளை அறிமுகம் செய்வதில் நாங்கள் மிகுந்த மகிழ்ச்சியடைகிறோம். தரம், நீடிப்புத்தன்மை, வசதிகள் அல்லது மிக நவீனமான வடிவமைப்புகள் ஆகியவற்றின் அடிப்படையில், வகையினத்தின் சிறந்த தயாரிப்புகளை வழங்குவதில், ஜான்ஸன் எப்போதும் முன்னோடித்துவ நிலையில் விற்றிருக்கிறது. தென்னிந்தியாவின் மிகப்பெரிய டைல்ஸ் உற்பத்தியாளராகத் திகழும் வகையில் எங்களது தினசரி உற்பத்தி செயல்திறன் தோராயமான 7 லட்சம் சதுரஅடிகள் டைல்ஸ் ஆகும். கோயம்புத்தூரில் இன்று மேற்கொள்ளப்பட்டுள்ள புதிய அறிமுகங்கள், எங்களது வாடிக்கையாளர்களுக்கு வகையினத்தின் சிறந்த வாழ்க்கை முறை தீர்வுகளை வழங்க வேண்டுமென்னும் எங்களது உறுதிப்பாட்டிற்கான மற்றொரு சான்றாதாரமாகும்” என்று கூறினார்.

**புதிய தயாரிப்புகளின் அறிமுகம்**

அறிமுகம் நிகழ்வின் போது, H&R ஜான்ஸன் ஜான்ஸன் டைல்ஸ், ஜான்ஸன் மார்போனைட், ஜான்ஸன் போர்சிலானோ மற்றும் ஜான்ஸன் என்ட்யூரா ஆகிய அதன் நான்கு டைல் பிராண்ட் பிரிவுகளில் H&R ஜான்ஸன் 200 – க்கும் மேற்பட்ட புதிய டைல் கருத்தாக்கங்களை அறிமுகம் செய்துள்ளது மற்றம் பல்வேறு புதிய வசதிகளை உட்படுத்தியுள்ளது.

இந்த அறிமுகத்தின் முதன்மையான ஈர்ப்பு, டைல்ஸ் இடப்பட்ட மேற்பரப்பினை சுத்தமாகவும் மற்றும் அரோக்கியமாகவும் பராமரிக்கும் தனித்துவமிக்க CARE®சாதக அம்சத்துடன் கூடிய, பெரிய வடிவிலான போர்சிலின் ஸ்லாப்கள் பிரிவில் ஜான்ஸன் போர்சிலானோ கால்பதித்துள்ளதாகும். 120 X 120 செ.மீ, 120 cm X 180 செ.மீ மற்றும் 120 X 240 செ.மீ ஆகிய பெரிய அளவுகளில் இது கிடைக்கப்பெறுகிறது. இந்த ஸ்லாபுகள், டைல்-ஜாயிண்டுகளைக் குறைக்கிறது மற்றும் அமைவிடத்தை அதிகம் பெரியதாகவும் மற்றும் சீரானதாகவும் மாற்றுகிறது.

“இந்த போர்சிலானோ ஸ்லாபுகள் ஆரோக்கியம் மற்றும் சுகாதார காரணிகளை கொண்டிருப்பதோடு மட்டுமின்றி, வலிமையில் எத்தகைய சமரசமும் இன்றி வழக்கமானவற்றைக் காட்டிலும் மெல்லிய வடிவமைப்பினைக் கொண்டதாக உருவாக்கப்பட்டுள்ளது கட்டிடத்தின் சுமையைக் குறைக்கும் மற்றும் போக்குவரத்தின் போது குறைவான எடை காரணமாகவும் மற்றும் குறைவான சதுரஅடிகள் காரணமாகவும் குறைப்பது உட்பட பல்வேறு வழிகளில் கார்பன் கால்-தடத்தைக் குறைக்கும் வகையிலும் செயலாற்றுவது சுற்றுச்சூழலுக்கும் உகந்ததாகத் திகழ்கிறது” என்று கூறினார் திரு.தினேஷ் வியாஸ் அவர்கள்.

இது தவிர்த்து, ஜான்ஸன் போர்சிலானோ பிராண்டின் கீழ், தனித்துவமிக்க ஜெர்ம்-ஃப்ரீ தன்மை கொண்ட மற்றும் மேற்கூறப்பட்ட மெல்லிய வடிவமைப்பின் சாதக அம்சங்களைக் கொண்ட 120 செ.மீ x 60 செ.மீ அளவுகளிலான 32 புதிய டைலிங் தீம்கள் அறிமுகம் செய்துள்ளது.

மற்றொரு முதன்மையான பிராண்டான – ஜான்ஸன் மார்போனைட்டின் கீழ், இந்நிறுவனம் தொழில்துறையின் முதல் வொயிட்டெஸ்ட் விட்ரிஃபைடு டைலை “ஹிமாலயன் வொயிட்” என்னும் பிராண்டின் கீடை, 60 – க்கும் மேற்பட்ட புதிய கருத்தாக்கங்களில், 80 செ.மீ x 80 செ.மீ & 60 செ.மீ x 120 செ.மீ மற்றும் 80 செ.மீ x 160 செ.மீ அளவுகளில் விட்ரிஃபைடு பாலிஷ்டு மற்றும் மேட் ஃபினிஷ்களில் அறிமுகம் செய்துள்ளது.

மேலும் இந்நிறுவனம், ஜான்ஸன் பார்சிலானோ SMART சீரீஸில், 30 X 60 செ.மீ அளவுகளில், ஸ்லிம் டைல்களாக, வெறும் 5 மிமீ அடர்த்தி மற்றும் ஜெர்ம்-ஃப்ரீ தன்மை கொண்ட முதல் சில கருத்தாக்கங்களையும் அறிமுகம் செய்யும். இத்தகைய வடிவில் சுவர் டைல் வகையினத்தில், இத்தகையதொரு தயாரிப்பினை அறிமுகம் செய்துள்ள உலகின் ஒரே நிறுவனமாக இது திகழ்கிறது.

ஜான்ஸன் டைல்ஸ் பிராண்டின் கீழ், 80 செ.மீ x 40 செ.மீ மற்றும் 60 செ.மீ x 30 செ.மீ அளவுகளில், புதிதாக அறிமுகம் செய்யப்பட்டுள்ள “KR@FT” வரிசைகள், அழகியல் பிரிவில் ஒரு டிரெண்டி மேட் ஃபினிஷ் கொண்ட புத்தம் புதிய அணுகுமுறையைக் கொண்டுள்ளது. இப்புதிய வரிசைகளின் தனித்துவமிக்கதன்மையானது, மேட்டாக இருப்பின், இதன் மேற்பரப்பினை பராமரிப்பது மிகவும் சுலபமாகும் மற்றும் இது மேற்பரப்பிலுள்ள மைக்ரோ-ரஃப்னஸ் வழியாக கட்டுப்படுத்தப்படுகிறது. இந்த சுவர் டைல் கருத்தாக்கங்களுக்கு கூடுதலாக, அழுக்கும் மற்றும் வழுக்குதல் தவிர்ப்புதன்மை கொண்ட புதிய தொகுப்பு 60 செ.மீ x 60 செ.மீ அளவில் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. மேலும் இந்த பிாண்டின் கீழ், 30 X 30 செ.மீ அளவு ஒருங்கிணைக்கப்பட்ட ஃபுளோரிங் தேர்வுகளுடன் கூடிய 30 X 60 செ.மீ அளவிலான புதிய “KLEO” தொகுப்பினையும் இந்நிறுவனம் அறிமுகம் செய்துள்ளது. டைலிங்கிங் மூன்று முக்கிய அம்சங்களான – நீடிப்புத்தன்மை, மேம்பட்ட செயல்திறன் மற்றும் அழகியல் ஆகியவற்றினை ஒருங்கிமைத்த, சுவாாகள் மற்றும் வாஷ்ரூம்கள், கிட்சன்கள் மற்றும் பாசேஜ்களுக்கான சிறந்த தேர்வாக KLEO திகழ்கிறது. KLEO தொகுப்பின் சாடின் சர்ஃபேஸ் ஃபினிஷ் பிரதிபலிப்பு இல்லாததோடு மட்டுமின்றி, பராமரிக்க சுலபமானதாகவும் திகழ்கிறது.

“தொழில்துறை மற்றும் சிறப்பு டைலிங்குகள் பிரிவின் முதலாவது மற்றும் மிக உறுதியான பிராண்டாக ஜான்ஸன் எண்ட்யூரா திகழ்கிறது. சமீபத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட நகரங்களில் அறிமுகம் செய்யப்பட்ட, எங்களது **ரெடி டு யூஸ் ஜான்ஸன் எண்ட்யூரா ஸ்டெப்பிங் ஸ்டோன் ஸ்டேர்கேஸ்** டைலிங் தீர்வுகளுக்கு கிடைத்த வரவேற்பு எங்களுக்கு மிகுந்த மகிழ்ச்சியை அளிக்கிறது மற்றும் எங்களது அதற்கான உற்பத்தித்திறன் எத்தகைய தேவைப்பாடுகளையும் ஈடேற்றும் வகையில் அதிகரித்துள்ளதன் காரணமாக அதை பிற நகரங்களுக்கும் விரிவுபடுத்துகிறோம்.

அனைத்திற்கும் மேலாக, தான் இயங்கும் பிரிவில் கொண்டுள்ள தலைமைத்துவ நிலை மற்றும் பிரபலத்தன்மையை உறுதிப்படுத்தும் வகையில் ஜான்ஸன் எண்ட்யூராவிற்கு சமீபத்தில் **"கன்ஸ்யூமர் சூப்பர்பிராண்ட்ஸ்"** விருது சமீபத்தில் வழங்கப்பட்டுள்ளதை தெரிவித்துக் கொள்வதில் நாங்கள் மிகுந்த மகிழ்ச்சியடைகிறோம்'' என்று நிகழ்வில் கூறினார். திரு.ஜாய்தீப் முகர்ஜி அவர்கள். ஜான்ஸன் எண்ட்யூரா ஸ்டோனெக்ஸ் பிராண்டின் கீழ் எங்களது புதிய வகையினம் 30 செ.மீ X 45 செ.மீ அளவில் உயர் ரிலீ∴ப் எலிவேஷன் டைல்கள் வகையினமாக அமைந்துள்ளது. மற்றொரு புதிய அறிமுகமாக 40 செ.மீ x 40 செ.மீ அளவீனம் கொண்ட புதிய எண்ட்யூரா டிசைனர் தொகுப்புகள், பாதைகள், பேடியோ மற்றும் காரிடார்கள் போன்ற அதிகம் நடக்கும் வாய்ப்புகளைக் கொண்ட பகுதிகளுக்கு அழகியல் மற்றும் நீடிப்புத்தன்மையை இணைத்து வழங்கும் வகையில் உருவாக்கப்பட்டுள்ளது.

**H & R ஜான்ஸன் (இந்தியா) குறித்து:**

1958 – ம் ஆண்டு நிறுவப்பட்ட H&R ஜான்ஸன் (இந்தியா), இந்தியாவில், செராமிக் டைல்ஸ் பிரிவின் முன்னோடித்துவ நிறுவனமாகும். கடந்த அறுபது ஆண்டுகளுக்கும் மேலாக, H&R ஜான்ஸன் பல்வேறு தயாரிப்பு வகையினங்களை சேர்த்து, தனது வாடிக்கையாளர்களுக்கு ஒரு முழுமையான தீர்வுகளை வழங்கி வருகிறது. இன்று, டைல்ஸ், சானிட்டரிவேர், பாத்∴பிட்டிங்ஸ் இன்ஸஜீனியர்டு மார்பிள் மற்றும் குவார்ஸ் ஆகியவற்றுடன் மாட்யூலர் கிட்சன்கள்மற்றும் மாட்யூலர் ∴பர்னிச்சர் வகையினங்களில், முழுமையான தீர்வுகளை வழங்கும் ஒரே இந்திய நிறுவனம் என்னும் பெயரை, H&R ஜான்ஸன் கொண்டுள்ளது. டைல்ஸ்களுக்கு ஜான்ஸன் டைல்ஸ், ஜான்ஸன் போர்சிலானோ, ஜான்ஸன் மார்போனைட் மற்றும் ஜான்ஸன் எண்ட்யூரா ஆகிய நான்கு துணை-பிராண்டுகளைக் கொண்டுள்ளதன் வழியாக, அனைத்து அமைவிடம் மற்றும் பயன்பாட்டிற்குமான முழுமையான டைலிங் தீர்வுகளை ஜான்ஸன் அளிக்கிறது. சேனிட்டரிவேர், ∴பாஸெட்கள், ஆக்ஸசரீஸ் மற்றும் நல்வாழ்வு தயாரிப்புகள் உட்பட்ட முழுமையான தீர்வுகளை ஜான்ஸன் பாத்ரூம்ஸ் அளிக்கிறது. ஜான்ஸன் கிட்சன்ஸ் மாட்யூலர் இந்தியன் மற்றும் இறக்குமதி செய்யப்பட்ட ஜெர்மனியின் நம்பர்.1 கிட்சன் பிராண்ட் நொபீலியாவின் தயாரிப்புகளை அளிக்கிறது. மேலும் நாங்கள் ஜெர்மணியின் முன்னணி பெட்கள் மற்றும் வார்டிரோப்கள் போன்ற மாட்யூலர் ∴பர்னிச்சர்கள் பிராண்டான ரௌச் உடனும் கூட்டாண்மை மேற்கொண்டுள்ளோம். செராமிக் / விட்ரி∴பைடு டைல்கள் பிரிவில் H&R ஜான்ஸன் 13 டைல் உற்பத்தியகங்களை நாடு முழுவதும் கொண்டுள்ளது மற்றும் பாத்ரூம் பாத்ரூம் ∴பிட்டிங் தயாரிப்புகளுக்கான 2 தொழிலகங்களைக் கொண்டுள்ளது. இவற்றின் வருடாந்திர உற்பத்தித்திறன் 68 மில்லியன் சதுர அடிகளாகும். நாடு முழுவதும் பரவியுள்ள "ஹவுஸ் ஆ∴ப் ஜான்ஸன்" ஷோரூம்கள் வலையமைப்பை H&R ஜான்ஸன் கொண்டுள்ளது.

மேலும் கூடுதல் தகவல்களுக்கு, தொடர்பு கொள்ளவும் **www.hrjohnsonindia.com**

**ஊடகத் தொடர்பிற்கு:**

ஹோஹனா இரானி | +91 9920499231| yohanna.irani@madisonpr.in
கேத்தன் திரிவேதி | +91 86920 07772 | trivedi.ketan@hrjohnsonindia.com